# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 419/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 17.06.2025.**

| Name : சுபலட்சுமி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் இறந்துபோய்விட்டார். கடந்த 12.05.2019ம் தேதி இரவு 9.30 மணிக்கு எனது கணவர் மருந்து கடையிலிருந்து வீட்டிற்கு சென்ற போது தங்கதுரை என்ற நபர் மருந்து வாங்குவது போல் வந்து திருப்பால் களிம்பு மருந்து உள்ளதா என கேட்டார். பிறகு திடீரென கல்லாப்பெட்டியில் இருந்த ரூ.1000/-(500 ரூபாய் தாள் இரண்டு) பணத்தை எடுத்துக் கொண்டார். பிறகு நான் அந்த நபருடைய கையை பிடித்து தடுத்த போது அவர் என் கழுத்தை பிடித்து கொன்று விடுவேன் என மிரட்டினார். நான் பிறகு சத்தம் போட்டு அக்கம் பக்கம் உள்ளவர்களை அழைத்தேன்.

2) பிறகு அக்கம் பக்கத்தில் உள்ள ரகுமான் மற்றும் அசாருதின் பீர்குமாரன் ஆகியோர் வந்து அந்த நபரை துரத்திய போது அவர் ஓடிவிட்டார். ஆஜர் எதிரி தான் எனது கடைக்கு வந்து திருடிய நபர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். பிறகு இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். திருடிய

நபர் பெயர் தங்கதுரை என்று சொன்னார்கள். பிறகு மறுநாள் தங்கதுரையை பிடித்த போது அவர் வசம் இருந்து ரூ.500 2 தாள்களை கைப்பற்றியதாக சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் ரூ.500/- இரண்டு தாள் எனது கடையிலிருந்து திருடியதா என்றால் அவ்வாறு தான் உள்ளது. அது **சா.பொ.1** ஆகும். (சாட்சி தன்னிடம் பணம் ஒப்படைக்கப்பட்டதை நேரடியாக இடைக்கால பொறுப்பில் பெற்றுக் கொண்டார்) போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இல்லை, எதிரி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

ஓம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 419/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 17.06.2025.**

| Name : Habiburahaman | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து மருந்து கடை நடத்தி வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். அ.சா.1 கணவர் சித்த மருத்துவமனை வைத்து நடத்தி வந்தார். அவரது கணவர் இறந்துபோய்விட்டார். கடந்த 12.05.2019ம் தேதி இரவு 9.30 மணிக்கு நான் மற்றும் என் தம்பி அசாருதின் இருவரும் எங்கள் கடையில் இருந்த போது அய்யோ என்னை காப்பாற்றுங்கள் என்று ஆயா கத்தினார். அப்போது தாத்தா வெளியே சென்றிருந்தார்.

2) ஆஜரிலுள்ள எதிரி அப்போது சித்த மருத்துவமனையிலுள்ள அறையிலிருந்து வெளியே வந்தார். அவரை நான் பார்த்தேன். எதிரி ஆயா ரூமிலிருந்த மேஜையிலிருந்து இரண்டு ரூ.500/- நோட்டு ஆக ரூ.1000/- பணத்தை கேட்காமல் எடுத்துச் சென்றதாக ஆயா சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். எதிரி கையில் இரண்டு ரூ.500/- நோட்டு இருந்ததை நான் பார்த்தேன். நான் பிடிப்பதற்குள் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். அ.சா.1 இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

**வழக்கறிஞர் ஆஜரில் இல்லை, எதிரி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

ஒம்/— தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 419/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 17.06.2025.**

| | |
|---|---|
| **Name : Azarudheed** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து மருந்து கடை நடத்தி வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். அ.சா.1 கணவர் சித்த மருத்துவமனை வைத்து நடத்தி வந்தார். அவரது கணவர் இறந்துபோய்விட்டார். கடந்த 12.05.2019ம் தேதி இரவு 9.30 மணிக்கு நான் மற்றும் என் அண்ணன் இருவரும் எங்கள் கடையில் இருந்த போது பாட்டி சத்தம் போட்டார். நானும் எனது அண்ணனும் ஓடிச் சென்று பார்த்த போது பணம் ரூ.1000/- டிராவிலிருந்து எடுத்து சென்றதாக அ.சா.1 தெரிவித்தார்.

2) ஆஜரிலுள்ள எதிரி அப்போது சித்த மருத்துவமனையிலுள்ள அறையிலிருந்து வெளியே வந்தார். எதிரி பாட்டி மேஜையிலிருந்து இரண்டு ரூ.500/- நோட்டு ஆக ரூ.1000/- பணத்தை கேட்காமல் எடுத்துச் சென்றதாக பாட்டி சொன்னார். நாங்கள் பிடிப்பதற்குள் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். அ.சா.1 இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார்.

3) கடந்த 13.05.2019ம் தேதி இரவு 09.00 மணி சுமாருக்கு ஜலகண்டாபுரம் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் செல்போன் கடை வைத்த சேகர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம்

செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும்.

4) என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சாட்சி கையொப்பம் கேட்டதால் போட்னேன். 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். என்னிடம் காட்டப்படும் கடந்த 13.05.2019ம் தேதிய மதியம் 12.50 மணிக்கு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5) கடந்த 13.05.2019 ம் தேதி காலை 11.30 மணிக்கு நான் மற்றும் சேகர் இருவரும் தாசர் வளைவில் உள்ள எதிரி தங்கதுரை வீட்டு முன்பாக அவரை கைது செய்த போது அவரிடமிருந்து எந்த வித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் ஆமாம். அப்போது பாட்டி கடையில் இருந்து ரூ.1000/– திருடியது சம்மந்தமாக தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு நடந்தவற்றை சொன்ன போது ஜலகண்டாபுரம் காவல் துறையினர் அதை எழுதி பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம்.

6) அதில் நான் மற்றும் சேகர் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றால் நான் போட்டது தெரியும், சேகர் போட்டதை நான் கவனிக்கவில்லை. அப்போது சேகர் இருந்தாரா என்றால் இருந்தார். கடந்த 13.05.2019ம் தேதி 12.50

மணிக்கு எதிரி கொடுத்த தகவலின் பேரில் அவருடைய வீட்டு முன்பிருந்து ரூ.500/– நோட்டு இரண்டு கைப்பற்றிய போது நான் உடனிருந்தேன் என்றால் ஆமாம். அப்போது போலீசார் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் நான் மற்றும் சேகர் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றால் ஆமாம்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.